Academic Research News

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

Tolkappiyam in the Perspective of Indian Knowledge System

Dr. Vinod Vasudevan, Assistant Professor, Tamil Department, Tagore Government Arts and Science College (Autonomous) (NAAC A certified), Puducherry – 605008.

Abstract

The Indian Knowledge Systems (IKS) functions as a distinct department within the Ministry of Education, Government of India, to create an ecosystem wherein the wisdom of ancient Indian ancestors is integrated with modern scientific frameworks. This article seeks to incorporate the ancient Tamil grammatical treatise, Tolkāppiyam, into the IKS framework. Tolkāppiyam contains numerous concepts of universal relevance, including the principle of the five elements of nature, the classification of six kinds of living beings based on their cognitive faculties, the celebration of life, the thinai (landscape-based) principles, the analytical framework of mudal (the whole) and sinai (the parts) for parsing natural phenomena, the diversity and uniqueness of nature, and the mortality of all life forms. These concepts are embedded within the grammatical aphorisms (sūtras) of the text. In this article, all such concepts are compared with corresponding ideas found in major Indian philosophical traditions, including the Vedas, Sāṅkhya, Jainism, and Buddhism. A total of eleven thematic areas are examined in this comparative analysis. Through this exercise, the article aims to establish Tolkāppiyam's relevance as a philosophical treatise within the IKS framework. The article follows the traditional method of footnoting, in which all source quotations and their corresponding online links are cited numerically and listed at the end of the text. Since Tamil translations or summaries of the referenced materials are provided in the article, including full English quotations in the main body would likely impede readability; this justifies adopting the traditional footnote format. The bibliography lists all primary websites and reference links used in the study.

Keywords: Indian Knowledge System, *Tolkappiyam*, Philosophy, Five Elements, Nature.

References

[1] *Bhagavad-Gita As It Is (Original 1972 Edition)*. A.C. Bhaktivedanta Swami Prabhupada, translator, Collier Macmillan Publishers, London, 1972. Internet Archive.
[2] Barre Center for Buddhist Studies. “Outline of Abhidhamma.” *Barre Center for Buddhist Studies*, Winter 2008.
[3] Barre Center for Buddhist Studies. “Outline of Abhidhamma.” *Barre Center for Buddhist Studies*, Winter 2008.
[4] *Project Madurai*. https://www.projectmadurai.org/.
[5] *IKS Home Page*. https://iksindia.org/.
[6] *Internet Archive*. https://archive.org/.
[7] *Tattvarthasutra by Acarya Umasvami – With Explanation in English from Acarya Pujyapada’s Sarvarthasiddhi*. Vijay K. Jain, translator, https://nikkyjain.github.io/jainDataBase/downloads/TattvarthaSutra-English.pdf.
[8] *Taittiriya Upanishad*. A. Mahadeva Sastri, translator, 1903, Wisdom Library.
[9] *Samkhya-Karika – Vacaspati Misra's Commentary (Tattva-Kaumudi)*. Mahamahopadhyaya Ganganath Jha and Dr. Har Dutt Sharma, translators, Oriental Book Agency, Poona, 1965. Internet Archive.

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

[10] Sukumar, Dr., and Dr. P. Rajalakshmi. *Understanding India*. Bharathi Books Publishers, Puducherry, 2024.
[11] *Wisdom Library*. https://www.wisdomlib.org/.
[12] *Learn Sanskrit Online*. https://www.learnsanskrit.org/.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: I sincerely acknowledge my gratitude to Dr. R. Karthikeyan, Guest Lecturer in Alagappa Government College of Arts and Science, who helped me in all sorts of correction and guidance for this article.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

இந்திய ஞான அமைப்பில் *தொல்காப்பியம்*

முனைவர் வினோத் வாசுதேவன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) (NAAC A சான்றிதழ் பெற்றது), புதுச்சேரி – 605008.

ஆய்வுச்சுருக்கம்

இந்திய ஞான அமைப்பு என்ற தனிப்பிரிவில் இந்திய முன்னோர்களின் அறிவுப்பரப்பு தற்கால அறிவியலுக்கேற்ப பலவகைகளில் பரப்பப்படுகின்றது. இக்கட்டுரை தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் 'இந்திய ஞான அமைப்பில்' எவ்வாறு பொருந்துகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. உலகம் முழுமைக்கும் பொதுவாகக் கொள்ளத்தகுந்த செய்திகள் தொல்காப்பியத்தில் இடம்பெறும் முறைகளையும், அவை இந்தியாவின் மெய்யியல் கருத்துகளோடு ஒத்துப்போகும் முறைகளையும் இக்கட்டுரையில் காணலாம். தொல்காப்பியத்தில் உள்ள ஐம்பூதங்கள் சார்ந்த கொள்கை, ஆறறிவாக உயிர்களைப் பகுக்கும் முறை, திணைக்கோட்பாடுகள், உலகப்பொருள்களைப் பிரித்துப்பார்க்கும் முறை முதலான செய்திகள்யாவும் வேதம், சாங்கியம், ஜைனம், புத்தம் முதலான மெய்யியல் உலகங்களில் உள்ள செய்திகளோடு பொருத்தப்படுகின்றன. ஏறக்குறைய பதினோரு (11) உட்தலைப்புகளில் இவற்றைக் காணலாம். தொல்காப்பியமும் இந்தியாவின் மெய்யியல் நூல் என்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்ட விழைகின்றது. இக்கட்டுரைக்கு மரபார்ந்த அடிக்குறிப்பு நெறிமுறை கடைபிடிக்கப்பட்டுள்ளது. ஆங்கில மேற்கோள்கள், அவை இடம்பெற்றுள்ள இணைய இணைப்புகள்யாவும் கட்டுரையின் இறுதியில் எண்ணிட்ட அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. துணைநூற் பட்டியலில் அடிப்படை இணைய தளங்களின் மூல இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் துணைவினைகளும் இடைச்சொற்களும் சேர்த்து எழுதப்பட்டிருக்கும். பொன். கோதண்டராமன் ஐயாவின் இக்காலத் தமிழ் இலக்கணப்படி அவை எழுதப்பட்டுள்ளன.

குறிப்புச்சொற்கள்: இந்திய ஞான அமைப்பு, *தொல்காப்பியம்*, மெய்யியல், ஐம்பூதங்கள், இயற்கை.

அறிமுகம்

இந்திய ஞான அமைப்பு என்ற கோட்பாடு சார்ந்த, தனித்தன்மையான துறையை இந்திய அரசாங்கத்தின் கல்வித்துறை அக்டோபர் 2020 முதல் வளர்த்துவருகின்றது[1]. இது இந்தியாவின் தொல் பழங்காலம்முதல் காலனிய ஆதிக்கம் தொடங்கும்வரை இருந்துவந்த இந்திய முன்னோர்களுடைய அறிவியலையும் கலைகளையும் ஒருங்கிணைந்த முறையில் கற்பதைக் குறிக்கும். இந்தியாவின் ஆதிஞானம் யாது; அது எவ்வாறெல்லாம் தோன்றி வளர்ந்தது; அதன் அடிப்படையான மெய்யியல் கூறுகள் யாவை; அதை இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்துவது ஆகியவற்றைக் குறித்து இது உரையாடுகின்றது. இக்கோட்பாட்டை தற்பொழுதுள்ள கல்வித்துறைகளில் பரவலாக்குவதற்குத் தேவையான நிறுவனக் கட்டமைப்பு, பலதரப்பட்ட உரையாடும் கூடங்கள் (கருத்துக் கூடங்கள், பயிற் கூடங்கள் போல), பள்ளிமுதல் உயராய்வுவரை அது சார்ந்த பாடத்திட்டம் ஆகியவற்றை எல்லாம் நடுவணரசின் கல்வித்துறை முன்னெடுத்துவருகின்றது[2]. 'இந்திய ஞானம்' என்பது பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் குவிந்திருக்கும் பெருவாரியான அறிவுப்பரப்பு ஆகும். அது மெய்யியல், கணிதம், வானியல், மருத்துவம், இலக்கியம், கலை முதலான பல்துறைகளிலும் பரந்துபட்டிருக்கின்றது[3].

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

இந்திய ஞான அமைப்பின் உள்ளடக்கம் என்பது சிந்துவெளிப் பண்பாட்டைத் தொட்டுவிட்டு, நான்மறைகள் முதற்கொண்டு நாட்டிய சாஸ்திரம்வரை செல்கின்றது. நான்மறைகள், பதின்மூன்று உபநிடதங்கள், பகவத் கீதை ஆகியவை கூறும் வேதாந்தம்; ஞாயம், வைசேடிகம், சாங்கியம் முதலான ஆறு தரிசனங்கள் கூறும் உலகஞானம்; புத்தம், ஜைனம் முதலானவை கூறும் பொருள்வாதம்சார் ஞானம் என இவற்றில் பரவியிருக்கும் இந்திய மெய்யியல் நுணுக்கமாக உரையாடப்படுகின்றன.

மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களில் உள்ள படைப்பாற்றலும் அறச் எண்ணங்களும்; நாட்டிய சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம் முதலானவற்றில் உள்ள கலை நுட்பங்களும்; இந்தியக் கோயில்களிலும் அரண்மனைகளிலும் உள்ள கட்டடக் கலைநுட்பங்களும் அறிவியல் முறைப்படி பகுத்தாராயப்படுகின்றன. சூரிய சித்தாந்தாவில் உள்ள வானியல், பாணினியில் உள்ள மொழிநுட்பம், சுஸ்ருத சங்கீதாவில் உள்ள ஆயுர்வேத மருத்துவநுட்பம், அர்த்த சாஸ்திரத்தில் உள்ள நாட்டரசியல் சார்ந்த நுட்பங்கள் எனப் பல்துறைகளில் வளர்ந்த, இந்திய முன்னோர்களின் கருத்துகள்யாவும் இன்றய அறிவியலுக்குப் பொருந்தும் வகையில் ஆராயப்படுகின்றன. இந்திய மெய்யியல் கொள்கைகள் பலவற்றில் உள்ள வினைக் கொள்கை, அறக்கருத்துகள், வசுதெய்வக் குடும்பகம்[4] என்ற உலகப் பொதுக் கண்ணோட்டம் ஆகியவை இந்தியப் பண்பாட்டுத் தளத்தில் வைத்து விளக்கப்படுகின்றன. இவற்றோடு சேர்த்து, தமிழ்ச் சங்க இலக்கியத்தின் காதல், வீரம் கொண்ட கருத்தாக்கம், சிலம்பு கூறும் அறம், திருக்குறளின் உலகப் பொதுத்தன்மைபட்ட கருத்துகள் ஆகியவற்றையும் பேசுகின்றனர். ஆனால், அவை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளன[5]. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், கிடைத்தவற்றுள் தமிழின் தொடக்கப் படைப்பான தொல்காப்பியம் ஓரிரு வரிகளில்மட்டும் சுட்டிக்காட்டப்படுகின்றன.[6]

இக்கட்டுரை தொல்காப்பியம் என்ற தமிழின் அடிப்படை நூல் இந்திய ஞான அமைப்புக்குள் மெய்யியல் துறையில் எவ்வாறு இன்றியமையாப் பங்காற்றும் என்பதைக் குறித்து உரையாடுகின்றது. அதன்வழியாக இந்தியஞான அமைப்பில் தமிழின் இன்றியமையாத பங்களிப்பை வலியுறுத்த முயற்சிக்கின்றது.

தொல்காப்பியத்தில் உலகப் பொதுக் கருத்தோட்டம்

நமது *தொல்காப்பியம்* ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய, உலகின் மிக முக்கியமான இலக்கண நூல். இதில் இலக்கணவியலும் இலக்கியவியலும் ஒன்றாக அமைந்துள்ளது. பிற மொழிகளில் இரண்டும் தனித்தனியாகப் பார்க்கப்படும். இதுவே தொல்காப்பியத்தை, உலக வரலாற்றில் அமைந்த சிறப்பான நூல்களுள் ஒன்றாக உயர்த்துகின்றது. தொல்காப்பிய இலக்கணமே மெய்யியலை அடிப்படையாகக் கொண்டது என்கின்றனர். அது ஜைனம் என்றும் புத்தம் என்றும் ஆசீவகம் என்றும் சைவம் என்றும் பலவாறு விளக்குகின்றனர். இவ்வாறு எண்ணுவதற்குத் தோற்றுவாயாக இருப்பது தொல்காப்பிய இலக்கணச் செய்திகள் ஊடே விரவிக் கிடக்கும் உலகப் பொதுக்கருத்துகளும் எண்ணங்களும் ஆகும். அவற்றை இந்திய மெய்யியலின் கருத்துகளோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம். அவையே தொல்காப்பியத்தை இந்திய ஞான அமைப்பில் சேர்க்கின்றது. அவையெல்லாம் பின்வரும் தலைப்புகளில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

ஐம்பூதங்கள்

வேதங்கள், உபநிடதங்கள், ஆறு தரிசனங்கள்யாவும் ஐம்பூதங்களைப்பற்றி பேசுகின்றன. சான்று: "பிரம்மனிடமிருந்து ஆகாயம், காற்று, நெருப்பு, தண்ணீர், பூமி ஆகிய பஞ்சமகா பூதங்கள் பிறந்தனவாக" தைத்திரிய உபநிடதம் கூறுகின்றது[7]. ஜைனமும் புத்தமும் லோகாயுதவாதமும் நான்கு பூதங்களைமட்டும் ஏற்கின்றன. சான்று: "ரூபம் என்பது பூமி, நீர், காற்று, நெருப்பு - அதாவது, திடப்பொருள், நீர்மைப்பொருள், வாயுப்பொருள், வெப்பப்பொருள் ஆகிய நான்கு மகாபூதங்களை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும்; அவை

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

பலவகையாகக் கலந்து உருவாகும்" என்று புத்தத்தின் அடிப்படை நூலான அபிதம்மம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது[8].

தமிழ் முன்னோர்கள் ஐம்பூதங்களையே ஞாலத்தின் அடிப்படையாகக் கொண்டனர். 'மண் திணிந்த நிலனும்' முதலான புறநானூற்றுப் பாடல்களைச் சான்று காட்டலாம். தொல்காப்பியமும் ஐம்பூதக் கொள்கை கொண்ட நூல்தான் என்பது தமிழுலகில் யாவரும் அறிந்ததே:

நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் … (தொல்காப்பிய மரபியல். 91)

ஐம்பூதங்களின் தோற்ற முறைமையில், வைதீக மரபு பிரம்மத்திலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் உரைக்கின்றது; அவைதீக மரபு ஆகாயத்தைக் கொள்ளவில்லை; தமிழ்மரபு நிலம் தொடங்கி ஆகாயம்வரை மட்டும் முறைப்படுத்துகின்றது என்பதைத் தொல்காப்பியம்வழி அறிகிறோம்.

ஆறறிவு

உலக உயிரினங்கள்யாவும் இயற்கையை அறியும் புலன்களின் இருப்பைக்கொண்டு ஆறாகப் பகுக்கப்பட்டமையைத் தொல்காப்பியர் ஆவணப்படுத்தியுள்ளார் என்பது தமிழுலகம் அறிந்ததே.

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே

…ஆறறிவதுவே அவற்றோடு மனனே (தொல்காப்பிய மரபியல். 27)

ஜைன மதமும் ஐம்புலன்களைக்கொண்ட உயிரினப் பகுப்பை முன்மொழிகின்றது. ஏகேந்திரியம், துவேந்திரியம், திரியேந்திரியம், சதுரேந்திரியம், பஞ்சேந்திரியம் என்ற வரிசையில் ஒரு புலன்முதல் ஐந்து புலன்கள்வரை உயிர்களை ஜைன ஞானிகள் தத்துவார்த்த சூத்திரத்தில் முன்மொழிந்துள்ளனர்[9] உயிரினக் கூறுகளை ஆழமாகப் பகுத்துப்பார்க்கும் ஜைனம் மனத்தை வேறு பகுப்புக்குள் அடக்குகின்றது. அணுக்களால் ஆகும் உடல் ஆனது புலன்கள், உள்ளுறுப்புகள் என ஒவ்வொரு படிநிலையாக வளர்வதை 'பரியாப்தி' என்ற கலைச்சொல்லுக்குள் பகுத்துப்பார்க்கின்றது. மனம் என்பது இறுதிப் படிநிலை வளர்ச்சி. அது 'மனைப்பரியாப்தி' எனப்படுகின்றது[9] தொல்காப்பியமோ மனத்தை ஐம்புலன்களுக்கு அடுத்த வளர்ச்சியான ஆறாம் அறிவாகக் கொள்கின்றது என்பதை மேலே கண்டோம். எனவே, தொடு உணர்வுமுதல் பகுத்துணர்வுவரை கூடிய உயிரினங்களை ஆறாகப் பிரிக்கும் தொல்காப்பியம் ஜைன மதத்தோடு சேர்த்து இந்திய உயிரியல் ஞானத்தில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது.

பிறப்புக் கொண்டாட்டம்

"எனது வாழ்வின்வழி கொண்டாட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. எனது வாழ்வு பற்றற்று இருப்பதன்று; அனைத்தையும் கொண்டாடுவது" என்று ஓஷோ கூறுகிறார்[10]. இந்த இயல்பான எண்ணத்தின்படி, உலக மக்கள் பிறந்தநாள் கொண்டாட்டத்தைப் பொதுப்பண்பாடாக வைத்திருக்கின்றனர். அது கொண்டாடப்படும் முறைகள் காலந்தோறும் இடந்தோறும் மாறுபடும். **“பழந்தமிழ்ப் புலவர்கள் அரசனின் பிறந்தநாளுக்கான விண்மீன் நிலைத்திருக்கப் பாடுகின்றனர்: “நின்று நிலைஇயர் நின் நாண்மீன்” (புறநானூறு - 24.24)** மணிமேகலையில் கோமுகிப் பொய்கையிலிருந்து வெளிப்படும் அமுத சுரபி புத்தரின் பிறந்த நாளன்றுதான் வெளிப்படுகின்றது.

இருது இளவேனிலில்…

மாபெரும் பாத்திரம்…

அந்நாள் இந்நாள் அப்பொழுது இப்பொழுது (மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை.40 - 46)

புத்தர் பிறந்தபொழுது, உலகில் ஏற்பட்ட நன்மைகளை அறவண அடிகள் மணிமேகலையிடம் பட்டியலிடுகிறார்.

"புத்த ஞாயிறு தோன்றும் காலை

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

திங்களும் ஞாயிறும் தீங்குறா விளங்கும்… (மணிமேகலை, அறவணவடிகள் தொழுத காதை 86)

இவ்வாறு அரசர்கள், ஞானிகள் ஆகியோரின் பிறந்தநாளைக் கொண்டாடும் செய்திகளுக்குத் தொல்காப்பியமும் பதிவு ஒன்றைக் கொடுத்துள்ளது: **'பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்' (தொல்காப்பியப் புறத்திணையியல். 30)**

உயர்திணை-அஃறிணை

சமஸ்கிருதத்தில் புல்லிங்கா (ஆண்பால்), ஸ்த்ரீலிங்கா (பெண்பால்), நப்பூன்சகலிங்கா (பொதுப்பால்) என்ற முப்பால் பகுப்பு எல்லாப் பெயர்ச் சொற்களுக்கும் வகுக்கப்படும். அங்கே, உயிரற்ற பொருள்களுக்கும் ஆண் - பெண் பகுப்பு உண்டு[11]. எல்லாப் பொருள்களையும் ஆண் ஆற்றல் - பெண் ஆற்றல் என்ற படைப்பாகக் கண்டார்கள் போலும்! இதற்கு மாறாக, தொல்காப்பியம் பதிந்துள்ள தமிழ்த் திணைமரபு மக்களே உயர்வானவர் என்றும் மக்கள் அல்லாத பிற உயிருள்ளனவும் உயிரற்றனவும் உயர்வு அல்லாதவை என்கின்றது (தொல்காப்பியக் சொல்லதிகாரம்: 1.1). இதன் பொருத்தப்பாட்டை (தர்க்கத்தை) எண்ணிப்பார்க்க வேண்டும்.

அறிவு அடிப்படையில் அனைத்து உயிர்களையும் ஆறாகப் பகுத்ததைக் சுட்டிக் காட்டியவர் திணைப்பிரிவை முன்மொழிய வேண்டிய தேவையை எண்ணவேண்டும். பொதுவாக, மனிதர்களும் பிற உயிர்களும் பல செயல்களில் ஒன்றுதான். பிறப்பு, உண்ணுவது, இனப்பெருக்கம், உறைவிடத்தில் தங்குவது போன்ற செயல்களை மனிதர் மட்டுமல்லாது பிற உயிரினங்களும் செய்கின்றன. இவ்வளவு எண்ணிப் பார்த்தாலும் மனிதர்கள் முக்காலத்தையும் தம்மையும் தொடர்புபடுத்திக்கொள்ளும் செயல்; அனைத்து உயிரினத்தின்மீதும் பகுத்தறிவோடு கூடிய அன்பு கொள்ளல் ஆகிய செயல்களுக்கு வாய்ப்பு இருப்பதால் மனிதர்கள் ஒருபடி மேலே உயர்கிறார்கள். ஒரு வளர்ப்புநாய் தனக்கு உணவிடுபவரை நல்லவரா கெட்டவரா என்பதைக் கண்டறியமுடியாது அல்லவா?

தொல்காப்பியரும் திணைமரபை உலகத்தின் எல்லாப் பொருள்களுக்கும் பொதுவானதாகப் பொருத்திக் கூறுகிறார். **'நிலம்நீர் … இருதிணை ஐம்பால் …. இயல்நெறி …' (தொல்காப்பிய மரபியல். 91)**

இந்த அடிப்படைகளை எண்ணினால் தொல்காப்பியர் ஆவணப்படுத்திய திணைப்பகுப்பு இந்திய ஞானத்தில் காலம் என்ற மெய்யியல் சார்ந்தது.

ஒன்றும் வேறும்

இயற்கை என்பது பொருள்கள் வேறுபட்டு ஒன்றுபடுவதன் மூலம் இயங்குகின்றது. சான்றாக, நமது ஞாயிறும் தொலைவில் காணும் விண்மீன்களும் வெவ்வேறு அளவின என்றாலும் அனைத்தும் விண்மீன் (star) என்ற பொதுத்தன்மைக்குள் அடங்குகின்றன. ஆராய்ச்சி என்பதே வேறுபட்ட பொருள்களுக்குள் இருக்கும் ஒன்றுபட்ட பொருத்தங்களைக் கண்டறிவது. இதை இந்திய சமயக் கணக்கரின் மெய்யியல் கொள்கைகள் பலப்படக் கூறியுள்ளன. அதனால்தான் சமஸ்கிருதச் சொல்லிலக்கணத்தில் பெயர்களின் திணை சார்ந்த எண்பற்றி குறிப்பிடும்பொழுது, 'ஏகவசனம் (ஒருமை), இருமை (துவி வசனம்), பன்மை (பகுவசனம்)' ஆகிய பகுப்புகளைக் கூறுகின்றது[12]. தொல்காப்பியரும் இயற்கையின் இந்த அடிப்படையை வெளிப்படுத்தியுள்ளார்: **'ஒன்றே வேறே என்று இருபால்வயின் …' (தொல்காப்பியக் களவியல். 2)** இருமை என்பது தமிழ்மரபில் இல்லை என்பது தமிழ் இலக்கணிகள் அறிந்த ஒன்று. அது தொல்காப்பியரின் இக்கூற்றுவழி அறியமுடிகின்றது.

முதலும் சினையும்

இது தமிழ் இலக்கண மரபின் மிக இன்றியமையாத மெய்யியல் கருத்து. பொருளின் முழுமை முதல்; அதன் பிரிவுகள் சினை. இன்றைய நவீன அணுக்கொள்கைவரை இக்கருத்தைப் பொருத்திப்பார்க்கலாம். பேரண்டத்தின் எல்லா முழுப் பொருள்களையும்

பிரித்துக்கொண்டே சென்றால், அணுவில் முடியும். நவீன அறிவியல் அணுவைப் பிரித்ததோடு மட்டுமல்லாமல் அணுத்துகள்களையும் (sub-atomic particles) பிரித்துக் காட்டியுள்ளது. எனவே, அணுவை முதல் என்றால் அணுத்துகள்கள் அதன் சினை.

முதலும் சினையும் பொருள் வேறுபடாஅ
நுவலுங்காலை சொல் குறிப்பினவே (தொல்காப்பிய வேற்றுமை மயங்கியல். 6)

இந்திய சமயக்கணக்கர் மெய்யுரையிலும் இக்கூறு காணப்படுகின்றது. சான்றாக, கபில முனியின் சாங்கிய மெய்யுரையில், அணியும் ஆடையையும் அதன் மூலமான நுற்கண்டையும் அவை ஒன்றோடொன்று தொடர்புகொள்ளும் முறைகளையும் குறித்துப் பேசுகையில், 'முழுமைப்பொருளுக்கும் அதன் பகுதிப்பொருளுக்கும் (அவையவம்) உள்ள தொடர்பு நிலையானது' என்பதைப்பற்றி விளக்குகிறார்[13].

அகமும் புறமும்

தொல்காப்பியம் முன்வகுத்த அகத்திணை, புறத்திணை என்பது இந்திய ஞான அமைப்பில் தனித்தன்மையானது. வேதங்களிலும் காதல் பொருண்மை தொடர்பான ஸ்லோகங்கள் உள்ளதாக அறியப்படுகின்றது. 'காமம்' என்பது படைப்புக் கடவுளர்களுக்கு முன்பாகத் தோன்றியது என காமம்/காதலின் நிலையைத் தெய்வத்தன்மையாக அதர்வண வேத சூக்தம் உயர்த்துகின்றது[14]. வால்மீகியின் இராமாயணத்தில் இராமனுக்கும் சீதைக்கும் இடையே ஆன காதல்; இராமன் ஈடுபட்ட போர்கள் என சமஸ்கிருதப் புனைவுலகில் காதல், வீரம் சார்ந்த படைப்புகளைக் காணலாம். அவையாவும் காவிய தரிசனத்தில் பலவாறு விளக்கியுள்ளனர். இந்த அடிப்படையில் தமிழிலும் தண்டியலங்காரத்தில் காப்பியப் பண்புகள் பதிவாகியுள்ளன. இவற்றிற்கு எல்லாம் ஒரு அடிப்படைச் சட்டகத்தை வரையறுக்கும்படி, தொல்காப்பிய அகம்-புறம் கோட்பாடு அமைந்துள்ளது. நிலத்தை மையமாகக் கொண்ட திணைக் கட்டமைப்பு, அதில் நிலத்திற்கேற்ற மக்களின் பண்பாடு, அவற்றுக்குள் இருக்கும் காதல் சார்ந்த விழுமியங்கள், எதிரியிடம் காட்டும் வீரத்துக்குள் அறத்தைக் கடைபிடிப்பது, கடுஞ்சின வீரம் இருந்தாலும், இரவலர்களுக்கு மனம் இரங்குவது எனக் காலம் போற்றும் அகப்புறக் கொள்கை இந்திய ஞானத்தில் தனித்துப் பார்க்க வேண்டிய ஒன்று.

வாழ்க்கையின் முப்பொருள்

சமஸ்கிருத நூல்கள் வாழ்க்கைக்குத் தேவையான நான்கு உறுதிப்பொருள்களாக 'தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்' ஆகியவற்றைப் பேசுகின்றது[15]. தொல்காப்பியம் முதல் மூன்று உறுதிப்பொருள்களைமட்டும் முன்நிறுத்துகின்றது. **'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' (தொல்காப்பியக் கற்பியல். 1)** எல்லா உயிர்களும் வயிறு, உடல் ஆகிய இருவகையான பசியாறும் இன்பத்திற்காகப் பொருள் தேடுவதால், 'இன்பமும் பொருளும்' ஆகிய இரண்டு உறுதிப்பொருள்கள் முதன்மைபடுத்தப்பட்டுள்ளன. இறுதியான அறம் மனிதர்களுக்குப் பொருந்தும். இம்மூன்றைச் சரியாகக் கடைபிடித்தாலே வீடுபேற்றிற்கு இயல்பாக வழிவகுக்கும் என்பது தொல்காப்பியரின் உள்ளகிடக்கையாக இருக்கலாம்.

வாழ்க்கையின் நிலையாமை

'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை' (குறள்: 336) என்றும் 'அடப்பன்னி வைத்தார்… இரை நொந்தது … கிடந்தொழிந்தார்' (திருமந்திரம்: 148) என்றும் இவற்றைப் போல பிற தமிழ்நூல்களும் வாழ்வின் நிலையற்ற தன்மைகளைப் பலவாறு எடுத்துரைத்துள்ளன. 'உடல் என்பது அழியக்கூடியதுதான்; அது களையும் ஆடை போன்றது என்றும் அது தோன்றி மறையும் கனவு போன்றது என்றும் ஆத்மாவே மெய்யானது' என்றும் பகவத் கீதை கூறுகின்றது[16].

நிலையாமைக் கருத்தின் முன்னோடி ஜைனம் ஆகும். இந்த உடல், அதன் புலன்கள், அது கொள்ளும் பொருள்கள்யாவும் நீர்க்குமிழிகள் போல் மறைந்தும் கடந்தும் செல்லும் இயல்புடையன. எனவே அனைத்தும் 'அநித்தியம்' ஆகும்[17]. புத்தரும் "அனைத்துக் கட்டுப்பட்ட

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

பொருள்களும் நிச்சயமற்றன; துன்பத்தை அடையக்கூடியன; அழிவற்ற ஆத்மாவைக் கொண்டிராதன[18]" என்று அநிச்சைவாதக் கருத்தை முன்மொழிகிறார். மேலே, சுட்டியன போல, வாழ்க்கை என்பது நிலையற்றது என்ற கருத்து இந்திய மெய்யியலில் அடிப்படையான கருத்தியல். தொல்காப்பியமும் இக்கருத்தைப் பதிவதிலிருந்து விலகவில்லை. அகத்திணை மாந்தர்களுள் தலைவனுக்கு அமையும் கூற்றுகளைப் பட்டியலிடுகையில், 'நாள்' என்ற ஒன்று மிகக் குறுகிய நேரம் உடையது என்றும் இளமை என்பது வாழ்க்கையில் ஒரு முறை கிடைக்கக்கூடிய அரிய பொருள் என்றும் உரைக்கிறது: **'நாளது சின்மையும் இளமையது அருமையும்' (தொல்காப்பிய அகத்திணையியல். 44)** இது காலத்தின் நிலையாமையையும் உடல் கொள்ளும் பருவங்களின் நிலையாமையையும் குறித்து வருகின்றது. புறத்திணையியலில் உலகத்தின் மொத்த நிலையாமையை விளக்குவதற்கென்றே காஞ்சி என்ற திணைப்பிரிவையே தொல்காப்பியம் பதிவுசெய்துள்ளது.

'காஞ்சி தானே …

நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல்காப்பியப் புறத்திணையியல். 18)

அன்பின் பெருமை

அன்பை வலியுறுத்தாத மதங்களே கிடையாது என்று சொல்லலாம். இந்திய மதங்களுள் குறிப்பாக, புத்தம் அன்பை ஆழமாக அறிவுறுத்திய மதம் எனலாம். அபிதம்மம் நூலில் பல வகையான அறிவுநிலைகளைப் பிரித்துக்காட்டுகையில், இன்பம் சார்ந்த, அழகியலுடன் கூடிய நல்லறிவுநிலை (காமவச்சர ஷோபன சித்தா) என்பதைக் கூறும் பாடலில் அன்பு உரைக்கப்படுகின்றது. நல்லறிவுக்குள் கரிசனமும் அன்பும் வேர்கள் ஆகும் என்பதை 'ஷோபனா, அலோபா, அதோஷா' என்ற சொற்களால் புத்த ஆசிரியர் கூறுகிறார்[19].

மேலே, கூறிய தலைவனுக்கு அமையும் கூற்றுச் செயல்களுள் 'பிறர்மேல் வைக்கும் அன்பு என்பது குறுகிய மனத்தை விடுத்துப் பரந்த மனத்தைக் கொடுக்கும்' என்பதைத் தொல்காப்பியம் கோடிட்டுக்காட்டுகின்றது. **'அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்' (தொல்காப்பிய அகத்திணையியல். 44)**

தொகுப்புரை

இயற்கையின் இயல்புகளுள் ஐம்பூதங்கள், ஆறறிவு உயிர்கள், ஒன்றுபட்டு வேறுபடும் நிலை, முதல் என்ற முழுமையும் சினை என்ற கிளையுமான பொருளமைப்பு ஆகிய கருத்துகள்; மனித வாழ்வு தொடர்பாக வரும் திணைக் கோட்பாடு, அகம்-புறம் கொள்கை, நிலையாமை, அன்பின் பெருமை முதலான கருத்துகள் ஆகிய இவையாவும் தொல்காப்பியத்தில் பதிவாகியுள்ள முறைகள், அவை இந்திய மெய்யியலுடன் கூடிய தொடர்புகள் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.ஒவ்வொரு நூற்பாவுமே இலக்கணச் செய்தியோடு மெய்யியலைக் கூறுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கட்டுரையில் சுட்டிக்காட்டிய ஒவ்வொரு உட்தலைப்பும் ஆழமான உரையாடல்களுக்கு உட்பட்டன. எனவே, தொல்காப்பியம் வெறும் இலக்கணநூலாக மட்டும் கருதப்படல் கூடாது; திருக்குறளைப் போல, இந்திய ஞான அமைப்பில் இன்றியமையாத நூலாகப் போற்றப்பட வேண்டும்.

குறிப்புகள்

[1] *பகவத்-கீதா அஸ் இட் இஸ் (ஒரிஜினல் 1972 எடிஷன்).* ஏ.சி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா, மொழிபெயர்ப்பாளர், காலியர் மாக்மில்லன் பப்ளிஷர்ஸ், லண்டன், 1972. இணைய ஆவணகம்.
[2] பார்வை மையம். "அபிதம்ம வெளிக்கோடு." *பார்வை மையம் பௌத்த ஆய்வுகள்,* குளிர்காலம் 2008.
[3] பார்வை மையம். "அபிதம்ம வெளிக்கோடு." *பார்வை மையம் பௌத்த ஆய்வுகள்,* குளிர்காலம் 2008.
[4] *மதுரைத்திட்டம்.* https://www.projectmadurai.org/.

[5] *ஐகேஎஸ் முகப்பு*. https://iksindia.org/.
[6] *இணைய ஆவணகம்*. https://archive.org/.
[7] *ஆச்சார்ய உமாஸ்வாமி இயற்றிய தத்வார்த்தசூத்திரம் – ஆச்சார்ய பூஜ்யபாதரின் சர்வார்த்தசித்தியிலிருந்து ஆங்கில விளக்கத்துடன்.* விஜய் கே. ஜெயின், மொழிபெயர்ப்பாளர், https://nikkyjain.github.io/jainDataBase/downloads/TattvarthaSutra-English.pdf
[8] *தைத்திரிய உபநிடதம்*. ஏ. மகாதேவ சாஸ்திரி, மொழிபெயர்ப்பாளர், 1903, விஸ்டம் லைப்ரரி.
[9] *சாங்கிய-காரிகா – வாசஸ்பதி மிஸ்ராவின் உரை (தத்துவ-கௌமுதி)*. மகாமகோபாத்யாய கங்காநாத ஜா, மற்றும் டாக்டர் ஹர் தத் சர்மா, மொழிபெயர்ப்பாளர்கள், ஓரியண்டல் புக் ஏஜென்சி, பூனா, 1965. இணைய ஆவணகம்.
[10] சுகுமார், டாக்டர், & டாக்டர் பி. ராஜலட்சுமி. *அண்டர்ஸ்டாண்டிங் இந்தியா*. பாரதி புக்ஸ் பப்ளிஷர்ஸ், புதுச்சேரி, 2024.
[11] *விஸ்டம் லைப்ரரி*. https://www.wisdomlib.org.
[12] *சமஸ்கிருதம் ஆன்லைனில் கற்க*. https://www.learnsanskrit.org/.

அடிக்குறிப்புகள்

[1] "The Indian Knowledge Systems Division (IKS Division) of the Ministry of Education (MoE) was established in October 2020, with a vision to promote interdisciplinary and transdisciplinary research on all aspects of IKS, ..." https://iksindia.org/about.php
[2] "Registration Open: IKS-TKDL Workshop-..." https://iksindia.org/"The Indian Knowledge Systems (IKS) represents a vast reservoir of wisdom accumulated over millennia, encompassing diverse fields such as philosophy, medicine, mathematics, astronomy, literature,". {Understanding India; பக்க எண்: 80}
[3] "Vasudaiva kutumbakam ... world is one family ... all are interconnected ..." {Understanding India; பக்க எண்: 90}
[4] சுட்டிக்காட்டும் பக்கங்களில் சில பத்திகளில் சங்க இலக்கியம், திருக்குறள், சிலம்பு ஆகியவை குறித்து அடிப்படைச் செய்திகள் உள்ளன: {Understanding India; பக்க எண்: 86, 87}
[5] "Tolkappiyam, an ancient Tamil grammar, reflects the linguistic evolution of the era" {Understanding India; ப.எண்: 86}.
[6] "... "From That, verily,—from This Self—(Brahman) is ākāśa (ether) born; from ākāśa, the air; from the air, fire; from fire, water; from water, earth; from earth, ...man." (Taittiriya Upanishad, Brahmananda Valli, 6.1)(பின்வரும் இணைப்பு சுட்டிய பக்கத்தில், 'Mantra and Brāhmaṇa.' என்னும் தலைப்பின்கீழ் 8 கருத்துகளுக்குப்பின் இம்மேற்கோளைக் காணலாம்) https://www.wisdomlib.org/hinduism/book/the-taittiriya-upanishad/d/doc79803.htmlMaterial form (rūpa) … All the 28 material phenomena are based on the 4 great elements, earth, water, air, and fire (i.e., solid, liquid, gas, plasma), and these four also all arise together in different combinations or saturations. (பின்வரும் இணைப்பு சுட்டிய பக்கத்தில், '3)' என்று எண்ணிட்ட கருத்தில் இம்மேற்கோளைக் காணலாம் https://www.buddhistinquiry.org/article/outline-of-abhidhamma/
[7] 1 It is of five kinds: the class –jāti – of beings with one sense – ekendriya, with two senses – dvīndriya, with three senses – trīndriya, with four senses –caturindriya, and with five senses – pańcendriya.(Tattvārthasūtra; Page No. 358; sutra no.: 324), https://nikkyjain.github.io/jainDataBase/downloads/TattvarthaSutra-English.pdf
[8] molecules to form the body – āhāraparyāpti, development of the body – arīraparyāpti, development of the sense-organs – indriyaparyāpti, development of the respiratory organs – prāõāpānaparyāpti, development of the vocal organ – bhāÈāparyāpti, and development of the

Academic Research News

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

mind – manaĺparyāpti (Tattvārthasūtra: Page No. 362, https://nikkyjain.github.io/jainDataBase/downloads/TattvarthaSutra-English.pdf

[9] "Celebration is the foundation of my way of living – not renunciation but rejoicing". (Celebration | OSHO – Transform Yourself through the Science of Meditation – https://www.osho.com/read/osho/osho-on-topics/celebration

[10] Sanskrit nominal use three different genders. These are the masculine gender (puṃliṅga), the feminine gender (strīliṅga) and the neuter gender (napuṃsakaliṅga) .... Nouns use a fixed gender even if they refer to non-living things, and a noun's gender cannot usually be predicted from its meaning (பின்வரும் இணைப்பு சுட்டிய பக்கத்தில், 'the three genders' என்ற தலைப்பின்கீழ் இம்மேற்கோளை விளக்கமாகக் காணலாம் https://www.learnsanskrit.org/guide/nominals/gender-case-and-number

[11] Sanskrit nominals use three different numbers (vacana). These are the singular (eka-vacana), the dual (dvi-vacana), and the plural (bahu-vacana), ... (மேலே 11இல் உள்ள இணையவிணைப்பில் 'the three numbers' என்ற தலைப்பின்கீழ் காண்க)

[12] "… whole and parts. (Unsatisfied with this explanation on the ground of the relationship between the whole and its partsbeing eternal,-the author offers another explanation).- ...

[13] (Sankhya Karika; பக்க. எண். 50; பாடல் எண் – 85 https://dn790000.ca.archive.org/0/items/sankhyakarikatattvakaumudiofvachaspatimisraganganathajhahardutts harmapatkarm.m._202003_343_A/Sankhya%20Karika%20Tattva%20Kaumudi%20of%20Vachaspati%20Misra%20Ganganatha%20Jha%20Har%20Dutt%20Sharma%2C%20Patkar%20M.M..pdf

[14] Kâma was born at first; him neither the gods, nor the Fathers, nor men have equalled. To these art thou superior, and ever great; to thee, O Kâma, do I verily offer reverence. (Atharva Veda: X. Cosmogonic and Theosophic Hymns: IX, 2. ... | Internet Sacred Text Archive – பின்வரும் இணையப்பக்கத்தில் 19ஆம் எண்ணிட்ட வேதப்பாடல் மொழிபெயர்ப்பாக இம்மேற்கோள் அமைகின்றது) https://sacred-texts.com/hin/sbe42/av212.htm

[15] Purusharthas of the Indian knowledge system are Dharma (righteousness), Artha (material wealth), Karma (desire/plea. sure), and Moksha (liberation/spiritual fulfilment)… (Understanding India; Pg.No.88)

[16] And if we accept the Vedic conclusion as stated in the Bhagavad- gītā (antavanta ime dehāḥ) that these material bodies are perishable in due course of time (nityasyoktāḥ śarīriṇaḥ) but that soul is eternal, then we must remember always that the body is like a dress; therefore why lament the changing of a dress? The material body has no factual existence in relation to the eternal soul. It is something like a dream. In a dream we may think of flying in the sky, or sitting on a chariot as a king, but when we wake up we can see that we are neither in the sky nor seated on the chariot. (Bhagavat Gita as it is; Pg.No. 149) https://dn710101.ca.archive.org/0/items/bhagavadgitaasitisoriginal1972edition/Bhagavad-Gita%20As%20It%20Is%20%28Original%201972%20Edition%29.pdf

[17] The human body, the objects of senses, and the substances that are consumed and used, are of transient nature – anitya – as that of the bubble. (Tatvarttha Sutra; Pg. no. 387 https://nikkyjain.github.io/jainDataBase/downloads/TattvarthaSutra-English.pdf

[18] all conditioned things are transient (Anicca), subject to suffering (Dukkha), and devoid of an immortal soul (Anatta). (பின்வரும் இணையப் பக்கத்தில் '45. The Realisation of Nibbana' என்ற தலைப்பின்கீழ் இம்மேற்கோளைக் காணலாம்) https://archive.org/stream/abhidhamma_201807/abhidhamma_djvu.txt

[19] ... Kamavacara Sobhana Cittas, twelve are connected with two good Roots—generosity (alobha) and loving-kindness (adosa); twelve with three good Hetus—generosity, loving-kindness, and knowledge (amoha). (பின்னுள்ள இணைப்பில், 57ம் பக்கத்தில் 30ஆம் எண்ணிட்ட பத்தியில் இம்மேற்கோளைக் காணலாம்) https://archive.org/stream/abhidhamma_201807/abhidhamma_djvu.txt

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இக்கட்டுரை செவ்விதாக அமைய, மெய்ப்புத்திருத்தம்முதல் கருத்து உரையாடல்வரை செய்துகொடுத்தவர் எனது மூத்தவர் முனைவர் ஆர். கார்த்திகேயன் என்பார். தற்பொழுது, காரைக்குடி அழகப்பா அரசு கலை அறிவியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் அவருக்கு நன்றி நினைக்கக் கடப்பாடு உடையேன்.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.